நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW Federation of Tamil Schools Inc.

# 2020

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

### தரம்: உயர்நிலைப் பிரிவு (ஆண்டு 11, 12)

**Level : Advanced (Year 11 & 12)**

**பகுதி - II**

Part – II

**வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்**

Time Given : 90 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

September 2020

**புள்ளித்திட்டம்**

| | | |
|---|---|---|
| *1.* | *உரைப்பகுதி* | *(10 புள்ளி)* |
| | *வினாக்கள் 1-5 (5x2=10)* | |
| *2.* | *பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்* | *(5 புள்ளி)* |
| | *வினாக்கள் 6-10 (5x1=5)* | |
| *3.* | *பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்* | *(5 புள்ளி)* |
| | *வினாக்கள் 11-15 (5x1=5)* | |
| *4.* | *இடைவெளியை நிரப்புதல்* | *(8 புள்ளி)* |
| | *வினாக்கள் 16-19 (4x2=8)* | |
| *5.* | *கவிதை (வினா விடை)* | *(5 புள்ளி)* |
| | *வினாக்கள் 20-22 (3x1=3)* | |
| | *23 (i,ii) (2x1=2)* | |
| *6.* | *பந்தியை வாசித்துப் பதிலளித்தல்* | *(8 புள்ளி)* |
| | *வினாக்கள் 24-27 (4x2=8)* | |
| *7.* | *ஆங்கிலச்சொல் - தமிழ்ச்சொல்* | *(4 புள்ளி)* |
| | *வினாக்கள் 28-31 (4x1=4)* | |
| *8.* | *கட்டுரை* | *(25 புள்ளி)* |

**மொத்தம் 70 புள்ளிகள்**

***பின்வரும் 1 - 5 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்ட சொற் கூட்டத்திற்கு ஏற்ற தனிச் சொல்லை தெரிவு செய்து எழுதுக.***

*(அ) கட்டுக்கதை (ஆ) விகடகவி (இ) சுயசரிதை (ஈ) வெள்ளிவிழா (உ) பாசறை*

*1.* இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - ………………………………..

*2.* தனது வரலாறு - ………………………………..

*3.* நம்ப முடியாத கதை - ………………………………..

*4.* விகடமாகவும், பரிகாசமாகவும் பேசுபவன் - ………………………………..

*5.* போர் வீரர்கள் தங்கி இருக்கும் இடம் - ………………………………..

***6 - 10 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வாக்கியத்தை முடிக்கவும்.***

*6. திரௌபதி அம்புபட்ட மான்போல் அழுது ____________________*

*(அ) அரற்றினாள் (ஆ) கரைந்தாள் (இ) துடிதுடித்தாள் (ஈ) வீழ்ந்தாள்*

*7. தமிழ் மொழி எழுத்துக்கள் ஒழுங்குமுறையில் அமைந்த அட்டவணை ________________*

*(அ) அகராதி (ஆ) பாலர் பாடம் (இ) அரிச்சுவடி (ஈ) வசன கவிதை*

*8. ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் பொதுவாக வழங்கும் ஒரு சொல் ________________*

*(அ) பிணை (ஆ) கன்னி (இ) விதவை (ஈ) விவேகி*

*9. ஒருவர் முதன்முதற் புனையும் பாடல் ____________________*

*(அ) முதற்கவிதை (ஆ) தனிக்கவிதை (இ) கன்னிக்கவிதை (ஈ) தலைக்கவிதை*

*10. கண்ணன் திக்கித் திக்கிப் பேசினான். இதில் வரும் திக்கித் திக்கி என்பது _______________*

*(அ) அடுக்குத்தொடர் (இ) உவமைத்தொடர்*

*(ஆ) இணைமொழி (ஈ) மரபுத்தொடர்*

***11 - 15 வரையிலான வினாக்களுக்குக் கீழே தரப்பட்ட வாக்கியங்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.***

*11. பண்டைப் பனுவல்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.*

இங்கு **"பனுவல்"** என்பது

*(அ) உடைகள் (ஆ) நூல் (இ) பத்திரிகை (ஈ) இலக்கணம்*

*12. கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் தலைவரின் கூற்றை ஆட்சேபித்தனர்.*

**ஆட்சேபித்தல்** என்பதன் எதிர்ச்சொல்

*(அ)எதிர்த்தல் (ஆ) அலட்சியம் செய்தல் (இ) குறை கூறுதல் (ஈ) ஆமோதித்தல்*

13. “நளன் செலுத்திய தேர் காற்றினும் கடுகிச் சென்றது”. **காற்றினும் கடுகி** என்பது

(அ) காற்றோடு காற்றாக (இ) காற்றை விட மெதுவாக

(ஆ) காற்றை விட வேகமாக (ஈ) அழகாக

14. பின்வருவனவற்றுள்ளே **உம்மைத் தொகையாக** அமைந்த தொடர் எது?

(அ) மாம்பழம் (ஆ) விண்மீன் (இ) இன்சொல் (ஈ) இரவு பகல்

15. கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவருடைய புகழ்

(அ) மெய்ப்பாடு (ஆ) கல்வெட்டு (இ) மெய்க்கீர்த்தி (ஈ) கவசம்

**பின்வரும் 16 – 19 வரையிலான வினாக்களுக்கு கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து நிரப்புக.**

16. கண்ணீர் ____________________ போலச் சொரிந்தது.

(அ) அறுவி (ஆ) அருவி (இ) அரிவி (ஈ) அறிவி

17. புதுவருட தினத்தன்று தந்தையார் ____________________ பரிமாறினார்.

(அ) கைவிசேடம் (ஆ) கைவியளம் (இ) கையூட்டு (ஈ) கைவிடயம்

18. ஆன்றவிந்தடங்கிய சான்றோர் பலர் தமிழ்ச் ________________ வீற்றிருந்தனர்.

(அ) வீட்டில் (ஆ) சங்கத்தில் (இ) பாடசாலையில் (ஈ) படகில்

19. புதிதாக உருவாக்கம் பெற்ற சித்திரத்தேர் நேற்றுமாலை ____________________ விடப்பட்டது.

(அ) வீதிவலம் (ஆ) திறந்து (இ) பார்வைக்கு (ஈ) வெள்ளோட்டம்

**20 - 23 வரையிலான வினாக்களுக்குப் பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு உரிய விடையைத் தருக.**

“வெள்ளிய அன்னக் கூட்டம் விளையாடி வீழ்வதைப்போல்,
துள்ளியே அலைகள் மேன்மேல் கரையினிற் சுழன்றுவீசும்
வெள்ளலை கரையைத் தொட்டு மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடியாடி பெரியதோர் வியப்பைச் செய்யும்”.

20. இப்பாடலில் ஆசிரியர் புலப்படுத்த விரும்பும் மையப்பொருள்

21. “வெள்ளிய அன்னக் கூட்டம் விளையாடி வீழ்வது” எனும் கூற்று இப்பாடலில் எதனுடன் ஒப்பிடப்படுகின்றது ?

22. நண்டுப் பிள்ளைகள் செய்த வியப்பு எதுவாக இருக்கலாம்?

23. (i) இப்பாடலைப் படித்து இரசித்த பின் எந்த உணர்வு உமது மனதில் தோன்றுகிறது ?

(ii) அதற்கான காரணத்தை கூறுக ?

**பின்வரும் 24 – 27 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட உரை பகுதியை வாசித்து விளங்கி, கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

“தமிழில் உரைநடை நூல்கள் இல்லையென்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இக்குறைபாட்டைப் பற்றி எல்லோரும் வருந்துகின்றனர் இக்குறையை நீக்கும் நோக்கத்துடன் தான் இந்தக் கற்பனை நூலை எழுத முன்வந்தேன். மேலும் நீதிநூல், பெண்மதிமாலை, சமரசக்கீர்த்தனம் முதலியன ஏற்கெனவே வெளிவந்துள்ளன. அந்த நூல்களில் நான் குறிப்பிட்டிருக்கும் அறநெறிக்கொள்கைகளிற்கு உதாரணங்களைக் காட்டவும் இந்த நவீனத்தை எழுதினேன்” என்பது தமிழின் முதல் புதினத்தை படைத்த மாயூரம் வேதநாயகம்பிள்ளை (1826-1889) அவர்கள் தாம் எழுதிய “பிரதாபமுதலியார் சரித்திரம்” என்னும் நாவலில் ஆசிரியர் முன்னுரையின் முதற்பகுதியில் கூறியிருப்பதாகும்.

இந்த நவீனத்தில் முக்கியமான பங்கு கொள்பவர்கள் கதாநாயகனின் அன்னை “சுந்தர அண்ணியும்” கதாநாயகனின் மனைவி “ஞானாம்பாளும்” ஆவர். இவர்கள் இருவரும் உயர்குடியில், செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர்கள். எல்லாவிதமான இலட்சணங்களும் பொருந்தியவர்கள். வாழ்க்கையின் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தங்களுடைய கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீதியையும் மனிததர்மத்தையும் காக்க முன்வருகின்றனர்.

“இந்திய வாசகர்களுக்கு ராஜாராணி பற்றிப் படிப்பதில் மிகுந்த ஆசையுண்டு. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டால் அலைந்து திரிவதில் மிகுந்த உற்சாகம் உண்டு. பொன்னால் ஆக்கப்பட்ட அரசமாளிகையைப் பார்த்துக்கொண்டேயிருப்பதிலும், பூங்காவனத்தருகில் உள்ள நீர்வீழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு படுத்திருப்பதிலும் அவர்களுக்கு மிகுந்த பிரியமுண்டு. இம்மாதிரி மனப்பாங்குள்ள வாசகர்களின் சுவையை திருப்தி செய்வதற்காக ஞானாம்பாளை மனிதர் அடையக்கூடிய மகோன்னத பதவிக்கு உயர்த்தியிருக்கின்றேன்” என்கிறார்.

கதையில் வரும் கதாநாயகனின் தந்தையும், மாமனாரும் உயர்குடி பிறந்தவராயினும் வக்கிரப்போக்கும், விசித்திரகுணமும் உடையவர்கள். உபபாத்திரங்கள் பெற்றோரிடம் பாசம், சகோதர வாஞ்சை, கணவன் மனைவி அன்பு, கற்பு, எல்லோருக்கும் நலம்புரிதல், நாணயம், நன்றி ஆகிய நற்பண்புகளுக்கு உதாரணமாக விளங்குகின்றனர்.

தேசியப்பண்பு, இல்வாழ்க்கை, தென்னிந்திய மக்களின் பழக்கவழக்கங்களைச் சித்தரிப்பதோடு நகைச்சுவைச் சம்பவங்களும், சுவைமிக்க கதைகளும் இங்கு இடம் பெற்றிருக்கின்றன. நல்வழியின் இயல்பான சிறப்பையும் தீயவழியிலுள்ள கொடூரங்களையும் நான் விவரித்திருக்கும் முறையில் வாசகர் நல்லதை விரும்பி தீயதை வெறுக்க முன்வருவர் என்று நம்புகிறேன். அற்புதங்களையோ, அதீத உணர்ச்சி வசப்பட்டோ எழுதுவதைத் தவிர்த்திருக்கிறேன்.

“இந்நூல் வாசகர்களுக்கு இரசமாகவும் போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப் பெருமை கொள்கிறேன். இப்புதிய முயற்சியில் குற்றங்குறை இருப்பின் பொறுத்தருளுமாறு பொதுமக்களை வேண்டுகிறேன்” என்று தனது முன்னுரையை வேதநாயகம்பிள்ளை நிறைவு செய்கிறார்.

**வினாக்கள்**

24. தமிழில் எழுந்த முதலாவது நாவல் எது?

ஏன் இந்த நவீனத்தை ஆசிரியர் எழுதினார்?

25. இந்திய வாசகர்கள் பற்றிய ஆசிரியரின் கருத்துகள் எவை?

அவற்றை எவ்வாறு நிறைவு செய்திருக்கிறார்?

*26.* *உபபாத்திரங்கள் மூலம் ஆசிரியர் உணர்த்தியிருக்கின்ற கருத்துக்களை வைத்து அக்கால சமூகநிலையை எப்படிக் காண்கிறீர்?*

*27.* *முன்னுரையில் ஆசிரியர் நூலைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கும் அபிப்பிராயம் என்ன? வாசகர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் என்ன?*

***பின்வரும் 28 – 31 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.***

*28.* WWW : ..........................................................................................................

*29.* Globalaization : ...............................................................................................

*30.* Digital : ..........................................................................................................

*31.* Website : ........................................................................................................

***கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.***

*(அ) தமிழ் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு செய்தி வாசிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்க இருக்கிறீர். உம்மைப் பற்றியும், உமது திறமைகள், விண்ணப்பிப்பதற்கான காரணம், அந்நிறுவனத்தை மேம்படுத்துவதற்கான உமது பங்களிப்புப் பற்றியும், தெரிவித்து விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.*

*(ஆ) “நூலகங்களின் பயன்பாடு” எனும் தலைப்பில் உமது பாடசாலையில் ஆற்ற இருக்கும் உரையை எழுதுக.*

*திட்டமிடல் :*

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

**Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination**

# 2020